முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 986

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.06.2022, சனிக்கிழமை

1. தர்மபலம் கொண்ட தவசியே
   தரணிகாக்க வந்த ஞானியே
   பெருமைமிக்க தொண்டர் படைகளை உருவாக்கி
   பேருலகை காக்க அவதாரம் புரிந்தமகா சக்தியே
2. சக்திமிகு அரங்கனே உந்தனுக்கு
   சாற்றிடுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
   சக்திகூடிட ஞான அறிவுரை ஆசியை
   சாற்றுவேன் சுபகிருது விடை திங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் வைகாசி மாதம் 28 ம் நாள், 11.06.2022 சனிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனே கலியை மீட்க வந்த
   தவசி மகா சக்தி
   மண்ணுலகில் அரங்கன் பலமே
   மக்களை மீட்டு ஞானவான்களாக்கும்
4. ஆக்கம் தரும் அரங்கன் தர்மமே
   அழியாமை தரும் அருளமுதாக மாறி
   மாறியே உலகோர்க்கு மகத்துவம் கூட்டும்
   மக்களை எல்லாம் மரணத்தில் இருந்து மீட்கும்
5. மீட்கும் மகா சக்தியாக வந்த
   மேலவர்கள் துணைகொண்ட அரங்கனை
   ஆக்கமுடன் உலகோர் சந்தித்தால் போதும்
   அனைவருக்கும் ஞானபலம் கூடும்
6. கூடுமே தன் பிறவிப்பயனடைந்து
   குறையிலா பெரும்பேறு காணநேரும்
   நேர்மைகொண்ட அரங்கன் மார்க்கமே நீதிநெறிகாட்டும் ஞானமார்க்கமாகும்
   வருமுலகில் உலகோர் ஏற்றலால் போதும் வையகம் பெருமாற்றத்தை காணும்
7. காணவே அரங்கனை நோக்கி
   கலியுகத்தார் கட்டாயம் வரவேண்டும்
   ஞானம் பயின்று அரங்கன் வழியில்
   ஞானிகளாகி உலகமாற்றம் தரவேண்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–